என்று சொல்கின்றார்கள். அவைகளை அழித்துவிட்டு அதற்குப் பதிலாக பெரிய மர வள்ளிக்கிழங்கு போடுவது என்பதுதான் முதலாவதாக நடைபெற்று வருகிறது.

திரு. ஏ. பாலசுப்பிரமணியம்: சேலம் மாவட்டத்திலே அதிகமாக மர வள்ளிக் கிழங்கு விளைகிறது. ஆகவே அந்த மரவள்ளிக்கிழங்கை அரைத்து அதிலிருந்து அரிசி செய்வதற்காக சேலம் மாவட்டத்தில் ஏற்காட்டு மலை அடிவாரத்தில் கூட்டுறவுத் துறையிலே மரவள்ளிக்கிழங்கு தொழிற்சாலை ஏற்படுத்துவதாக குறிப்பு இருந்தது. அது எந்த அளவிலே இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அது பற்றி கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டும்.

திரு. எம். சங்கரலிங்கம்: மர வள்ளிக் கிழங்கு பயிரிடப்படுகிற முறையை ஊக்குவிப்பது, அதை உணவுப் பொருளாகத் தயாரித்து பயன்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் மர வள்ளிக் கிழங்கை மாவாக்கி அதை எடுத்து ஆலைகளும், நூற்பாலைகளும், நெசவாலைகளும், பசையாக மாற்றி உபயோகிப்பதற்கு பம்பாய் போன்ற நகரங்களுக்கு, அனுப்பப்படுவதாகச் சொல்கிறார்கள். உணவுப் பற்றாக்குறை காலத்தில் கேரளாவில் அதைத் தடை செய்திருக்கிறார்கள். அதைப் போல நம் அரசும் தடை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஆலோசனை அரசால் கவனிக்கப்படும். ஆனால் ஒரு வேற்றுமை இருக்கிறது. என்ன என்று கேட்டால், கேரளாவில் மர வள்ளிக்கிழங்கை ஒரு உணவுப் பொருள் என்று ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். மத்திய அரசும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் தமிழ் நாட்டில் என்ன காரணமோ தெரியவில்லை, அதை உணவுப் பொருள் என்ற அளவில் கணக்கில் எடுத்துக் கொள்ளாததால்தான் அது அதிகமாகத் தொழிற்சாலைகளுக்கு போய்ச் சேர்ந்து கொண்டிருக்கின்றது.

Incentive Increment to B.T. Teachers

* 266. *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of B.T. teachers in the Educational District of Pudukkottai who have reached the maximum of Rs. 250 prior to 2nd October 1970, who have passed the M.A. or M.Sc. or

M.Ed. Degree and who had not been granted the incentive increment as accorded in the G.O. Ms. No. 42 of the Education Department, dated 10th January 1969;

(b) whether those teachers were permitted to draw incentive increments in the revised scale of pay granted with effect from 2-10-1970; and

(c) if not, the reason therefor ?

பி.டி. ஆசிரியர்களுக்கு ஊக்க உயர்வுத் தொகை

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புதுக்கோட்டை கல்வி மாவட்டத்தில் 2—10—1970-க்கு முன்னர் ரூ. 250 என்ற உயரளவு விதத்தை எட்டியிருந்து, எம்.ஏ. அல்லது எம். எஸ்சி. அல்லது எம்.எட். தேறி, கல்வித்துறையின் 10—1—1969 நாளிட்ட 42 ஆம் எண் அரசாணையின்படி ஊக்க உயர்வுத் தொகை Incentive increment வழங்கப்படாத பி.டி. ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) 2—10—1970-லிருந்து புதிய சம்பள விதத்தில் ஊக்க உயர்வுத் தொகைகள் பெற அவ்வாசிரியர்கள் அனுமதிக்கப்பட்டனரா?

(உ) இல்லையெனில், அதற்கான காரணம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இரண்டு பி.டி. ஆசிரியர்கள்.

(இ) இல்லை.

(உ) அவர்கள் பழைய ஊதிய விகிதத்தில் உயர்ந்த பட்ச ஊதியத்தைப் பெற்று விட்டனர். அதனால் அவர்களுக்கு அப்போது அதிக கல்வித் தகுதி பெற்றமைக்காக ஊக்க ஊதியம் அளிக்கப்படவில்லை. அத்தகையோருக்கு 2—10—1970-ல் அமுலாக்கப்பட்ட திருத்திய ஊதிய விகிதத்தில் ஊக்க ஊதியம் அளிக்கலாமா என்பது பற்றிய கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. கே. எஸ். கணபதி: 2—10—1970-க்கு முன்னர் எம்.ஏ., எம்.எஸ்சி., எம்.எட். பட்டம் பெற்றவர்கள் பழைய ஊதிய விகிதத்திலே ரூ. 250 உச்ச நிலையை அடைந்துவிட்ட காரணத்தினாலே, அவர்கள் அந்த ஊக்க உயர்வு பெறவில்லை. ஆனால், இந்த முதுகலை பட்டத்திற்குக் கொடுக்கப்படும் ஊக்க ஊதியத்தினால், பெருமளவுக்கு புதிய ஊதிய விகிதத்திலே ரூபாய் 440-க்கு மேலே பெறுகிறார்கள். அதிலேயும் உச்ச கட்டம் ரூ. 500. ஆதலால் அவர்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். இந்தப் பிரச்சினை

1975 மே 2]

யானது ஏறத்தாழ 5 ஆண்டு காலமாக அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றது. இந்தத் தாமதத்திற்குக் காரணம் என்ன? அதைக் கொடுக்க அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கருத்துருவினை பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் 2—10—1970-க்குப் பிறகு அளிக்கப்பட்ட திருத்த மதிப்பீட்டின் அடிப்படையிலே ஊக்க உயர்வைத் தரலாமா என்பது பற்றித் தான் கேட்டிருக்கின்ருர்கள். அதுதான் பரிசீலனையில் இருக்கின்றது. அதைப் பற்றி விரைவிலே முடிவு எடுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 2—10—1970-க்கு முன்னுல் எம்.ஏ., எம்.எஸ்சி. தேர்வு பெற்றவர்களுக்கு இந்த ஊக்க உயர்வு பலனளிக்கவில்லை. ஆனுல், 2—10—1970-க்குப் பின்னுல் தேறியவர்கள், இவர்களைவிட ஜூனியர்களாக இருக்கக்கூடியவர்கள் ரூ. 30 அதிகமாகப் பெறுகிருர்கள். ஒரு குறிப்பிட்ட தேதிக்கு முன்னுல் அவர்கள் தேர்வு எழுதி தேறிய காரணத்தினுல் இவர்களுக்கு இது ஒரு தண்டனை போலவே அமைந்துவிட்டது. இதைப்பற்றி நீண்டகாலமாக அரசின் பரிசிலனைக்குக் கொண்டு வந்தும், ஒரு முடிவும் எடுக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. கல்வி அமைச்சர் அவர்கள் இதிலே கொஞ்சம் விரைவு காட்டி, ஒரு மாதத்திற்குள்ளாகவாவது முடித்து, அவர்களும் ஜூனியர்களைவிட கூடுதலாகச் சம்பளம் பெறக்கூடிய ஒரு நிலைமையை உண்டாக்கும் விதத்தில் மாற்றியமைக்க முயலுவார்களா? இந்த பைனுன்ஸ் ஜி.ஓ. இதற்கு இடம் அளிக்கிறது. இந்த இன்கிரிமெண்ட் அளவிலேயே இடம் அளிக்கப்படாமல் இருப்பதைத் திருத்தியமைக்க கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, நான் முதலிலேயே சொன்னேன். விரைவிலே முடிவு எடுக்கப்படும் என்று சொன்னேன். நியாயத்தின் அடிப்படையிலே அவர்களுக்கு ஊதியம் வழங்க முயற்சி செய்யலாம்.

திரு. எம். சங்கரலிங்கம் : பட்டதாரி ஆசிரியர்கள் முதுகலை பட்டம் பெற்ருல் 2 ஊக்க ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டும் என்பது விதி. 140 ரூபாய் சம்பளத்திலிருந்து 250 ரூபாய் பெற்றிருக்கிருர் என்ருல், வயது முதிர்ந்திருக்கின்ருர்கள் என்று பொருள். ஏனென்ருல், சம்பள விகிதத்திலே உச்ச கட்டத்திற்கே போயிருக்கின்ருர்கள். அவ்வளவு வயது முதிர்ந்த பருவத்தில் முதுகலை பட்டத்தைப் பெறுகிற ஊக்கத்தைப் பெற்றவருக்கு அந்த ஊக்க உயர்வு அடுத்த சம்பள விகிதத்திற்கு அவர்கள் மாற்றப்பட்ட பிறகு கொடுக்கவேண்டியது நியாயமானது. அதிலே காலதாமதம் செய்வதற்கு எந்த

விதமான காரணமும் இல்லை. ஆகவே, அதை ஒரு நல்ல முறையாக மாற்றியமைப்பதற்கும், எல்லோருக்கும் ஊக்கத்தை அளிப்பதற்கும் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அதுபற்றி முடிவெடுக்கப்படும்.

Idol Theft

* 268. Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the number of places in Tamil Nadu where idol theft cases have been reported from 1-4-1974 to 31-4-1975;

(b) the number of cases registered in connection with the idol thefts; and

(c) the number of idols recovered and the estimated value thereof?

சிலை திருட்டு

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் 1—4—1974 ஆம் நாள் முதல் 31—1—1975 ஆம் நாள் வரை, எத்தனை இடங்களில் சிலை திருட்டுகள் நடைபெற்றுள்ளதாக புகார்கள் வந்துள்ளன ?

(இ) அவை தொடர்பாக எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன?

(உ) மீட்கப்பட்ட சிலைகள் எத்தனை? அவைகளின் மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) தமிழ்நாட்டில் 1—4—1974 முதல் 31—1—1975 வரை 34 இடங்களில் சிலை திருட்டுகள் நடைபெற்றுள்ளன.

(இ) எல்லா களவுகளும் காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டு சம்மந்தப்பட்ட காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(உ) சுமார் ரூபாய் 2,82,400 மதிக்கக்கூடிய 43 சிலைகள் மீட்கப்பட்டுள்ளன.